www.surabooks.com

சுராவின்

CBSE

# தமிழ் உரைநூல்

வகுப்பு 7

புதிய வினாத்தாள் அடிப்படையில்
தயாரிக்கப்பட்டுள்ளது.

## சிறப்பம்சங்கள்

- செய்யுள், உரைநடை விளக்க மனவரைபடங்கள்
- செய்யுள் வரிவினா விடைகள்
- செய்யுள், உரைநடை எளிமையான வினாக்கள் மற்றும் விடைகள்
- இலக்கண விளக்கம் – அறிந்து கொள்க, நினைவில் கொள்க.
- CBSE வினாத்தாள் அடிப்படையில் சான்று தருக, நிரப்புக, இலக்கணக் குறிப்பு எழுதுக, கூறியவாறு செய்க – பகுதி இலக்கண வினாக்கள் விடைகள்.
- திருக்குறள் சீர்களால் நிரப்புக – வினா விடைகள்
- எளிய நடையில் துணைப்பாட வினாக்கள் விடைகள்
- பொதுப்பத்தி வினாக்கள் – விடைகள் (பலவுள் தெரிக – சுருக்கமான விடையளி மாதிரி)
- காட்சியைக் கண்டு கவினுற எழுதுக – படங்கள் மற்றும் விடைகள்.
- முக்கிய கடிதங்கள் மற்றும் பொதுக்கட்டுரைகள்
- CBSE மாதிரி வினாத்தாள்கள் இரண்டு கொடுக்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000/96001 75757 / 98409 26027
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண் : CB7_01

**எழுதி வழங்கியவர்**

சு. முத்தமிழ்ப்பிரியா, M.A., M.Ed

**திருத்தியவர்**

நா.சுந்தர், B.Lit.,

All rights reserved © SURA Publications. No part of this book may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, digitally, electronically, mechanically, photocopying, recorded or otherwise, without the written permission of the publishers. Strict action will be taken.

## மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 81242 01000 / 81243 01000
வாட்ஸ்அப் : 81242 01000 / 98409 26027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com

பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்

**Head Office**

**Sura Publications**
1620, 'J' Block, 16th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
**Phone :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**E-mail :** orders@surabooks.com
**Website :** www.surabooks.com

**For Orders Contact**

80562 94222
81242 01000
81243 01000
96001 75757
98409 26027

13-6-2025



www.surabooks.com

# பதிப்பாசிரியர் உரை

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.** – **திருவள்ளுவர்**

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் CBSE தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** ஏழாம் வகுப்பிற்கான **CBSE தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

CBSE வினாத்தாள் அடிப்படையில் செய்யுள், உரைநடை, இலக்கணம், துணைப்பாட வினாக்கள் விடைகள், கடிதங்கள் மற்றும் பொதுக்கட்டுரைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

***மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த CBSE தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.***

**இறையருளை வேண்டுகிறோம்!**
**நலமே விளைக! . . .**

- பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பதிப்பகம்)

## மாணவச் செல்வங்களே...

- ஆர்வமே சிறந்த செயலாக்கத்திற்கான வழி...
- பாடங்களை ஆர்வத்துடன் புரிந்து கொண்டு கதைப் போல் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு செய்யுளையும் அந்நூல், இயற்றியவர் பெயர் அறிந்திருக்க வேண்டும்.
- பாடலின் தொகுப்பு (அல்லது) அதன் தலைப்பு முதலியவற்றை அறிவது அவசியம்.
- செய்யுள் பகுதியில் நூற்குறிப்பு, ஆசிரியர் குறிப்பு, சொல்லும் பொருளும் படித்தல் அவசியம்.
- இலக்கணப் பகுதியில் 'அறிந்து கொள்க' எனும் தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தினை படித்துக் கொள்க.
- கட்டுரை வினாவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்புகளுக்கான தலைப்பை எழுத வேண்டும். குறிப்புகளைக் கொண்டு குறிப்புச்சட்டகம் அமைத்தல் வேண்டும். முன்னுரை மற்றும் முடிவுரையோடு குறைந்தபட்சம் மூன்று அல்லது நான்கு உட்தலைப்புகள் எழுத வேண்டும்.
- பழமொழிகள், திருக்குறள், மேற்கோள்கள், செய்யுள் வரிகள் போன்றவற்றைப் பயன்படுத்தினால் பொதுக்கட்டுரை சிறப்பாக அமையும்.

**ஆழ்ந்து படியுங்கள் வெற்றி உங்களுக்கே!**



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | மொழி **அமுதத்தமிழ்** | எங்கள் தமிழ்* (செய்யுள்) | 1-16 |
| | | ஒன்றல்ல இரண்டல்ல (செய்யுள்) | |
| | | பேச்சுமொழியும் எழுத்துமொழியும் (உரைநடை) | |
| | | ஆளுக்கு ஒரு வேலை(பொம்மலாட்டம்) (துணைப்பாடம்) | |
| | | குற்றியலுகரம், குற்றியலிகரம் (கற்கண்டு) | |
| 2. | இயற்கை **அணிநிழல் காடு** | காடு* (செய்யுள்) | 17-34 |
| | | அப்படியே நிற்கட்டும் அந்த மரம்(செய்யுள்) | |
| | | தமிழரின் கப்பற்கலை (உரைநடை) | |
| | | விலங்குகள் உலகம் (துணைப்பாடம்) | |
| | | நால்வகைக் குறுக்கங்கள் (கற்கண்டு) | |
| | | திருக்குறள்* (வாழ்வியல்) | |
| 3. | நாடு, சமூகம் **நாடு அதை நாடு** | விடுதலைத் திருநாள் (செய்யுள்) | 35-48 |
| | | தேசியம் காத்த செம்மல் பசும்பொன் உ.முத்துராமலிங்கத்தேவர் (உரைநடை) | |
| | | கப்பலோட்டிய தமிழர் (துணைப்பாடம்) | |
| | | ஓரெழுத்து ஒருமொழி, பகுபதம், பகாப்பதம் (கற்கண்டு) | |
| 4. | கல்வி **ஓதுவது ஒழியேல்** | அழியாச் செல்வம்* (செய்யுள்) | 49-62 |
| | | தேயிலைத் தோட்டப் பாட்டு (செய்யுள்) | |
| | | வாழ்விக்கும் கல்வி (உரைநடை) | |
| | | பள்ளி மறுதிறப்பு (துணைப்பாடம்) | |
| | | இலக்கியவகைச் சொற்கள் (கற்கண்டு) | |




enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 5. | கலை, அழகியல் **கலை வண்ணம்** | பூத்தொடுத்தல் (செய்யுள்) | 63-76 |
| | | பேசும் ஓவியங்கள் (உரைநடை) | |
| | | தமிழ் ஒளிர் இடங்கள் (துணைப்பாடம்) | |
| | | தொழிற்பெயர் (கற்கண்டு) | |
| | | திருக்குறள்* (வாழ்வியல்) | 77-90 |
| 6. | நாகரிகம், பண்பாடு, தொழில், வணிகம் **நயத்தகு நாகரிகம்** | விருந்தோம்பல்* (செய்யுள்) | |
| | | திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி (உரைநடை) | |
| | | திருநெல்வேலிச் சீமையும் கவிகளும் (துணைப்பாடம்) | |
| | | வழக்கு (கற்கண்டு) | |
| 7. | அறம், தத்துவம், சிந்தனை **ஒப்புரவு ஒழுகு** | புதுமை விளக்கு* (செய்யுள்) | 91-110 |
| | | அறம் என்னும் கதிர்* (செய்யுள்) | |
| | | ஒப்புரவு நெறி (உரைநடை) | |
| | | உண்மை ஒளி (துணைப்பாடம்) | |
| | | இலக்கணம் - பொது (கற்கண்டு) | |
| | | திருக்குறள்* (வாழ்வியல்) | |
| 8. | மனிதம், ஆளுமை **மானுடம் வெல்லும்** | மலைப்பொழிவு* (செய்யுள்) | 111-126 |
| | | தன்னை அறிதல் (செய்யுள்) | |
| | | கண்ணியமிகு தலைவர் (உரைநடை) | |
| | | பயணம் (துணைப்பாடம்) | |
| | | வினா, விடை வகைகள் (கற்கண்டு) | |
| படைப்புகளும் ஆசிரியர்களும் | | | 127-128 |
| பொதுப்பத்தி வினா - விடைகள் (பலவுள் தெரிக – சுருக்கமான விடையளி மாதிரி) | | | 129-150 |
| காட்சியைக் கண்டு கவினுற எழுதுக | | | 151-154 |
| கடிதங்கள் | | | 155-164 |
| பொதுக்கட்டுரைகள் | | | 165-190 |
| CBSE மாதிரி வினாத்தாள்கள் (I & II) | | | 191-202 |




enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

# TO ORDER WITH US

**SCHOOLS and TEACHERS:**

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

**DIRECT DEPOSIT**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A/c Name | **Sura Publications** | **Sura Publications** | **Sura Publications** | **Sura Publications** | **Sura Publications** | **Sura Publications** |
| Our A/c No. | **36550290536** | **21000210001240** | **6502699356** | **1154135000017684** | **13240200032412** | **50200031530945** |
| Bank Name | **STATE BANK OF INDIA** | **UCO BANK** | **INDIAN BANK** | **KVB BANK** | **FEDERAL BANK** | **HDFC BANK** |
| Bank Branch | Padi | Anna Nagar West | Asiad Colony | Anna Nagar | Anna Nagar | Cenotaph Road, Teynampet |
| IFSC | SBIN0005083 | UCBA0002100 | IDIB000A098 | KVBL0001154 | FDRL0001324 | HDFC0001216 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

G Pay **For Google Pay :** **98409 26027**

**For PhonePe :** **98409 26027**

**DEMAND DRAFT / CHEQUE**

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**STUDENTS :**

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com

www.surabooks.com

## இயல் 1 - மொழி - அமுதத் தமிழ்

# எங்கள் தமிழ் (கவிதைப்பேழை)

- நாமக்கல் கவிஞர் வெ . இராமலிங்கனார்

### மன வரைபடம்

**எங்கள் தமிழ்**

**தமிழ் மொழி**
1. அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது.
2. தமிழ் மக்களின் குரலாக விளங்குகிறது.

**மனிதர் இன்புற்று வாழ**
1. கொல்லாமை – குறிக்கோளாக
2. பொய்யாமை – கொள்கையாக இருக்க வேண்டும்

**தமிழ் கற்றோர்**
1. பொருளுக்காக புகழ மாட்டார்.
2. போற்றாதவரை இகழ மாட்டார்.

**பண்புகள்**
1. அறத்தையும் அன்பையும் தூண்டும்.
2. அச்சத்தைப் போக்கும்.
3. இன்பத்தை தரும்.
4. தேன் போன்ற மொழி.

### ஆசிரியர் குறிப்பு



- நாமக்கல் கவிஞர் என்றழைக்கப்படும் வெ.இராமலிங்கனார், **தமிழறிஞர், கவிஞர், ஓவியர், விடுதலைப் போராட்ட வீரர்** எனப் பன்முக ஆளுமைத்தன்மை கொண்டவர்.
- காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுக் காந்தியத்தைப் பின்பற்றியதால் இவர் '**காந்தியக் கவிஞர்**' என்றும் அழைக்கப்படுகிறார்.
- தமிழ்நாட்டு அரசின் முதல் அரசவைக் கவிஞர் என்னும் பெருமைக்குரியவர்.
- **மலைக்கள்ளன், தமிழன் இதயம், என்கதை, சங்கொலி** உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.

### சொல்லும் பொருளும்

- ஊக்கிவிடும் – ஊக்கப்படுத்தும்
- குறி – குறிக்கோள்
- விரதம் – நோன்பு
- பொழிகிற – தருகின்ற

### வினாக்கள்

**குறுவினா**

1. **தமிழ் மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை ?**

தமிழ்மொழி அனைவரிடமும் அன்பையும் அறத்தையும் தூண்டும். அச்சத்தைப் போக்கி இன்பம் தரும்.


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
www.surabooks.com

www.surabooks.com



**2. தமிழ் மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.**

தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்தும் இகழ்ந்தும் பேசமாட்டார்.

**சிறுவினா**

**1. 'எங்கள் தமிழ்' என்னும் பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

- தமிழ் மொழியானது, அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது.
- தமிழ் மக்களின் குரலாக விளங்குகிறது.
- தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்தும், இகழ்ந்தும் பேசமாட்டார்கள்.
- தமிழ்மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்; அச்சத்தைப் போக்கி இன்பம் தரும்.
- எங்கள் தமிழ்மொழி தேன் போன்ற மொழியாகும்.

**2. கவிஞர், தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?**

- தமிழைப் போற்றிப் புகழாத கவிஞர்களே இல்லை எனலாம். நம் கவிஞர் 'எங்கள் தமிழ்' என்னும் கவிதையில் நம் தமிழ் மொழியானது அன்பையும் அறத்தையும் தூண்டக்கூடியது.
- தேன் பல ஆண்டுகள் கெடாமல் இருப்பதை போலத் தமிழும் என்றும் கெடாமல் பாதுகாப்புடன் திகழ்கிறது.
- தேன் சாப்பிடச் சாப்பிட உடல் வளம் பெருகும். தமிழ் கற்க கற்க உள்ளம் வளம் பெருகும். அதனால் கவிஞர் தமிழைத் தேனுடன் ஒப்பிடுகிறார்.

**கூடுதல் வினாக்கள்**

**1. தமிழ் எதைத் தூண்டும்? எதைத் தரும்?**

தமிழ்மொழி அனைவரிடமும் அன்பையும் அறத்தையும் தூண்டும். அச்சத்தைப் போக்கி இன்பத்தைத் தரும்.

**2. கவிஞர் எதனோடு தமிழை ஒப்பிடுகிறார்?**

தமிழ்மொழி தேன் போன்ற மொழியென ஒப்பிடுகிறார்.

**3. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் படைத்த நூல்கள் யாவை?**

மலைக்கள்ளன், தமிழின் இதயம், நாமக்கல் கவிஞர் பாடல்கள், என் கதை, சங்கொலி முதலியன நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் படைத்த நூல்கள்.

## செய்யுள் வரி வினா விடை

**1. அருள்நெறி அறிவைத் தரலாகும்**
**அதுவே தமிழன் குரலாகும்**
**பொருள்பெற யாரையும் புகழாது**
**போற்றா தாரையும் இகழாது**
**கொல்லா விரதம் குறியாக**
**கொள்கை பொய்யா நெறியாக**
**எல்லா மனிதரும் இன்புறவே**
**என்றும் இசைந்திடும் அன்பறமே.**

www.surabooks.com



**வினாக்கள்**

1. **இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ?**

அ) மலைக்கள்ளன் ஆ) என் கதை

இ) சங்கே முழங்கு ஈ) நாமக்கல் கவிஞர் பாடல்கள்

**விடை ஈ) நாமக்கல் கவிஞர் பாடல்கள்**

2. **இப்பாடலை இயற்றியவர் யார் ?**

அ) பெருஞ்சித்திரனார் ஆ) சுரதா

இ) வெ.இராமலிங்கனார் ஈ) பாரதிதாசன் **விடை இ) வெ.இராமலிங்கனார்**

3. **இப்பாடலின் தலைப்பு யாது ?**

அ) இன்பத்தமிழ் ஆ) செந்தமிழ்

இ) எங்கள் தமிழ் ஈ) பைந்தமிழ் **விடை இ) எங்கள் தமிழ்**

4. **தமிழர் பொருள் பெற என்ன செய்யமாட்டார் ?**

அ) யாரையும் புகழ்ந்து பேசமாட்டார் ஆ) யாரிடமும் பேசமாட்டார்

இ) யாரிடமும் பொய் பேசமாட்டார் ஈ) யாரிடமும் பொருள் கேட்கமாட்டார்

**விடை அ) யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்**

5. **எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ உதவுவது எது ?**

அ) பகையும் நட்பும் ஆ) போரும் படையும்

இ) அன்புமும் அறமும் ஈ) பணமும் பொருளும் **விடை இ) அன்பும் அறமும்**

**கூடுதல் வினாக்கள்**

1. **காந்தியக் கவிஞர் என்று அழைக்கப்படுகிறவர்**

அ) உவமைக் கவிஞர் சுரதா ஆ) கவிஞாயிறு தாராபாரதி

இ) புரட்சிக்கவி பாரதிதாசன் ஈ) நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார்

**விடை ஈ) நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார்**

2. **அறிவைத் தருகின்ற நெறி ........................**

அ) அருள் ஆ) அன்பு இ) அறம் ஈ) ஈகை **விடை அ) அருள்**

3. **விரதம் என்பதன் பொருள் .................**

அ) கொல்லாமை ஆ) குறிக்கோள்

இ) நோன்பு ஈ) ஊக்கம் **விடை இ) நோன்பு**

4. **கத்தியின்றி ரத்தமின்றி எனத் தொடங்கும் பாடலை எழுதியவர்**

அ) காந்தியடிகள் ஆ) கவிஞர் வெ. இராமலிங்கனார்

இ) கவிமணி தேசிய விநாயகனார் ஈ) மகாகவி பாரதியார்

**விடை ஆ) கவிஞர் வெ. இராமலிங்கனார்**

5. **கொல்லாமை – இலக்கணக்குறிப்பு தருக.**

அ) முதனிலைத் தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

இ) எதிர்மறை தொழிற்பெயர் ஈ) விகுதி பெற்ற தொழிற்பெயர்

**விடை இ) எதிர்மறை தொழிற்பெயர்**

☆ ☆ ☆

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



# ஒன்றல்ல இரண்டல்ல (கவிதைப்பேழை)

- உடுமலை நாராயணகவி

## மன வரைபடம்

**ஒன்றல்ல இரண்டல்ல**

**தமிழ்நாட்டில் உள்ள அற்புதங்கள்**

**நன்செய் நிலவளம்**
வீசும் தென்றலில் தேன் மணம் கமழும், கனிகளும் தானியங்களும் விளையும்.

**பாடலாசிரியர்**
உடுமலை நாராயணகவி
(பகுத்தறிவுக் கவிராயர்)

**வள்ளல்களின் வரலாறு**
முல்லைக்குத் தேர் தந்தவன் – வள்ளல் வேள்பாரி
புலவர் சொல்லுக்குத் தலையை தந்தவன் – குமண வள்ளல்

**இலக்கிய வளம்**
பகைவரை வென்றதை பாடும் பரணி, இசைப்பாடலான பரிபாடல், கலம்பகம், எட்டுத்தொகை நூல்கள் என இலக்கிய வளங்கள் பலவாகும்.

## ஆசிரியர் குறிப்பு



- பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர் உடுமலை நாராயணகவி.
- இவர் தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியராகவும் நாடக எழுத்தாளராகவும் புகழ் பெற்றவர்.
- தமது பாடல்கள் மூலம் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர்.
- நாட்டுப்புற இசையின் எளிமையைக் கையாண்டு கவிதைகள் எழுதியவர்.

## சொல்லும் பொருளும்

- ஒப்புமை – இணை
- அற்புதம் – வியப்பு
- முகில் – மேகம்
- உபகாரி – வள்ளல்

## வினாக்கள்

**குறுவினா**

**1. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?**

தமிழ் நாட்டில் வீசும் தென்றலில் தேன் மணம் கமழும். சுவை மிகுந்த கனிகளும், பொன் போன்ற தானியக் கதிர்களும் விளையும். தமிழ் நாட்டின் நன்செய் நிலவளம் பலவாகும்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



**2. 'ஒன்றல்ல இரண்டல்ல' – பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.**

- முல்லைக்குத் தேர் தந்து மழை மேகத்தை விட புகழ் பெற்றான் வள்ளல் வேள்பாரி.
- புலவரின் சொல்லுக்காக தன் தலையையே தரத்துணிந்தான் குமண வள்ளல்.

**சிறுவினா**

**1. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை ?**

- பகைவரை வென்றதைப் பாடுவது பரணி இலக்கியம்.
- அத்தோடு இசைப்பாடல்களாகப் பரிபாடலும் கலம்பக நூல்களும் உள்ளன.
- வான்புகழ் கொண்ட திருக்குறளும் தமிழ் இலக்கிய வகைகளுக்கு மேன்மை தருகிறது.
- அகம், புறம் ஆகியவற்றை மெய்ப் பொருளாகக் கொண்டு பாடப்பட்டது சங்க இலக்கியங்கள்.
- இவைபோன்று சொல்லமுடியாத வகையில் தமிழில் இலக்கிய வகைகள் உள்ளன.

**2. தமிழில் அற இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றக் காரணம் என்ன ?**

இந்திய மொழிகள் எல்லாவற்றையும் விட, தமிழில்தான் அறநூல்கள் அதிகமாக இருக்கின்றன. நம் தமிழில் சிறந்த அற இலக்கியமாக திகழ்வது திருக்குறள். நம்முடைய மானுடர்கள் ஒழுங்கீனமான செயல்களில் ஈடுபடும்போது அவற்றை திருத்திக் கொள்ள அறக்கருத்துகளையும் நீதிக் கருத்துகளையும் போதிக்கும் தேவை ஏற்படுகிறது. அதனால் தோன்றிய இலக்கியம்தான் அற இலக்கியமாகும்.

**கூடுதல் வினா**

**1. தமிழின் இலக்கிய வளங்கள் யாது ?**

பகைவரை வென்றதைப் பாடுவது பரணி இலக்கியம். அதோடு இசைப்பாடலான பரிபாடலும், கலம்பக நூல்களும், எட்டுத்தொகையும், வான் புகழ் கொண்ட திருக்குறளும், அகம் புறம் ஆகியவற்றைக் கொண்டு பாடப்பட்ட சங்க இலக்கியங்களும் தமிழின் இலக்கிய வளங்களாகும்.

## செய்யுள் வரி வினா விடை

**1. பகைவென்ற திறம்பாடும் பரணிவகை – செழும்**
**பரிபாடல் கலம்பகங்கள் எட்டுத்தொகை – வான்**
**புகழ்கொண்ட குறளோடு அகம்புறமும் – செம்**
**பொருள்கண்ட தமிழ்ச்சங்க இலக்கியப் பெருஞ்செல்வம்**

**வினாக்கள்**

**1. இப்பாடலின் தலைப்பு யாது ?**

அ) ஒன்று இரண்டு ஆ) ஒன்றல்ல இரண்டல்ல
இ) தமிழும் தமிழரும் ஈ) அன்பும் அறமும் **விடை ஆ) ஒன்றல்ல இரண்டல்ல**

**2. வான்புகழ் கொண்டது எது ?**

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
இ) பரிபாடல் ஈ) திருக்குறள் **விடை ஈ) திருக்குறள்**

**3. பகைவரை வென்றதைப் பாடுவது எது ?**

அ) கலம்பகம் ஆ) தூது இ) பரணி ஈ) பள்ளு **விடை இ) பரணி**

www.surabooks.com



**4. அகம் புறம் ஆகியவற்றை மெய்ப்பொருளாகக் கொண்டு பாடப்பட்டது எது ?**

அ) சங்க இலக்கியங்கள் ஆ) நீதி இலக்கியங்கள்
இ) பக்தி இலக்கியங்கள் ஈ) காப்பியங்கள்

விடை **அ) சங்க இலக்கியங்கள்**

**5. இப்பாடலை இயற்றியவர் யார் ?**

அ) கண்ணதாசன் ஆ) மு.மேத்தா
இ) உடுமலை நாராயணகவி ஈ) மருதகாசி

விடை **இ) உடுமலை நாராயணகவி**

**2. முல்லைக்குத் தேர்கொடுத்தான் வேள்பாரி – வான்**
**முகிலினும் புகழ்படைத்த உபகாரி – கவிச்**
**சொல்லுக்குத் தலைகொடுத்தான் அருள்மீறி – இந்த**
**வள்ளலாம் குமணன்போல் வாழ்ந்தவர் வரலாறு**

**வினாக்கள்**

**1. முல்லைக்குத் தேர்கொடுத்தவன் யார் ?**

அ) குமணன் ஆ) ஓரி இ) வேள்பாரி ஈ) பேகன்

விடை **இ) வேள்பாரி**

**2. முகில் என்பதன் பொருள் யாது ?**

அ) மேகம் ஆ) மலை இ) காற்று ஈ) மின்னல்

விடை **அ) மேகம்**

**3. புலவருக்காகத் தலையைத் தரத்துணிந்தவன் யார் ?**

அ) குமணன் ஆ) ஓரி இ) வேள்பாரி ஈ) பேகன்

விடை **அ) குமணன்**

**4. உபகாரி என்பதன் பொருள் யாது ?**

அ) மேன்மை ஆ) வீரம் இ) செல்வம் ஈ) வள்ளல்

விடை **ஈ) வள்ளல்**

**5. இரண்டல்ல என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......**

அ) இரண்டு + டல்ல ஆ) இரண் + அல்ல
இ) இரண்டு + இல்ல ஈ) இரண்டு + அல்ல

விடை **ஈ) இரண்டு + அல்ல**

**கூடுதல் வினாக்கள்**

**1. உடுமலை நாராயணகவி எவ்வாறு புகழப்படுகிறார் ?**

அ) பகுத்தறிவுப் பகலவன் ஆ) பகுத்தறிவு சிந்தனையாளர்
இ) பகுத்தறிவு கவிராயர் ஈ) பகுத்தறிவுப் பேரொளி

விடை **இ) பகுத்தறிவு கவிராயர்**

**2. தமது பாடல்கள் மூலம் பகுத்தறிவு கருத்துகளை பரப்பியவர்**

அ) தாராபாரதி ஆ) சுரதா
இ) நாராயணகவி ஈ) பாரதியார்

விடை **இ) நாராயணகவி**

**3. அகமும் புறமும் எனப்படுவது**

அ) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆ) பரிபாடல், கலம்பகம்
இ) திருக்குறள், கலிங்கத்துப்பரணி ஈ) அகநானூறு, புறநானூறு

விடை **ஈ) அகநானூறு, புறநானூறு**

☆ ☆ ☆

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



# பேச்சுமொழியும் எழுத்துமொழியும் (உரைநடை உலகம்)

## மன வரைபடம்

### பேச்சுமொழியும் எழுத்துமொழியும்

**மொழியின் வடிவங்கள்**

1. பேசுவதும் கேட்பதும் – முதல் நிலை
2. எழுதுவதும் படிப்பதும் – இரண்டாம் நிலை

**கிளைமொழி**

நில அமைப்பு, இயற்கை தடைகள் (மாற்றம்) – கன்னடம், தெலுங்கு, மலையாளம் கிளைமொழிகள்

**பேச்சுமொழி**

1. மொழியின் உயிர்நாடி
2. உணர்வுகளை எளிதாக வெளிப்படுத்தும்
3. கருத்தை வெளிப்படுத்துவதை மட்டுமே நோக்கமாக கொண்டது.

**வட்டார மொழி**

ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்கள் வட்டாரமொழி.
**எ.கா.** இருக்கிறது – இருக்கு ; இருக்குது, கீது

**பேச்சுமொழியின் பொருள் வேறுபாடு**

**எ.கா.**

1. கவனி – பேணுதல்
2. என்னால் போக முடியாது – மறுப்பு இயலாமை

**எழுத்துமொழி**

1. பேச்சுமொழி வரிவடிவம் எழுத்துமொழி
2. காலம், இடத்திற்கேற்ப சொற்கள் சிதையாது.
3. அண்ணு, காலெ – அண்ணா, காலை

| பேச்சுமொழி | எழுத்துமொழி |
|---|---|
| உலக வழக்கு என்பர். | இலக்கிய வழக்கு என்பர். |
| சொற்கள் பெரும்பாலும் குறுகி ஒலிக்கும். | சொற்கள் முழுமையாக எழுதப்படும். |
| உணர்ச்சிக் கூறுகள் அதிகம். | உணர்ச்சிக் கூறுகள் குறைவு. |
| உடல் மொழியும் குரல் ஏற்றத்தாழ்வும் இணைவதால் அஃது எளிமையாகக் கருத்தை உணர்த்துகிறது. | உடல் மொழி, குரல் ஏற்றத்தாழ்வு போன்றவற்றிற்கு இடமில்லை. |

**இரட்டை வழக்கு**

1. பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடு இரட்டை வழக்கு மொழி ஆகும்.
2. உலக வழக்கு – இலக்கிய வழக்கு என்பார்.

## வினாக்கள்

**குறுவினா**

1. **மொழியின் இரு வடிவங்கள் யாவை ?**

வாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சுமொழியாகும். கண்ணால் கண்டு உணருமாறு வரிவடிவமாக எழுதப்பட்டுப் படிக்கப்படுவது எழுத்துமொழியாகும்.



www.surabooks.com

www.surabooks.com



**2. பேச்சுமொழி என்றால் என்ன ?**

- மொழியின் உயிர்நாடியாக விளங்குவது பேச்சுமொழி.
- பேச்சுமொழி உணர்வுகளை எளிதாக வெளிப்படுத்தும்.
- பேச்சுமொழி கருத்தை வெளிப்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டது.
- பேசப்படும் சொற்கள் மட்டுமின்றிப் பேசுபவரின் உடல்மொழி, ஒலிப்பதில் ஏற்ற இறக்கம் ஆகியனவும் பேச்சுமொழியின் சிறப்புக் கூறுகள் ஆகும்.

**3. வட்டார மொழி எனப்படுவது யாது ?**

பேச்சுமொழி இடத்திற்கு இடம் மாறுபடும். மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் மாறுபடும். இவ்வாறு மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டார மொழி என்பர்.

**சிறுவினா**

**1. பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக.**

| பேச்சுமொழி | எழுத்துமொழி |
|---|---|
| உலக வழக்கு என்பர். | இலக்கிய வழக்கு என்பர். |
| சொற்கள் பெரும்பாலும் குறுகி ஒலிக்கும். | சொற்கள் முழுமையாக எழுதப்படும். |
| உணர்ச்சிக் கூறுகள் அதிகம். | உணர்ச்சிக் கூறுகள் குறைவு. |
| உடல் மொழியும் குரல் ஏற்றத்தாழ்வும் இணைவதால் அஃது எளிமையாகக் கருத்தை உணர்த்துகிறது. | உடல் மொழி, குரல் ஏற்றத்தாழ்வு போன்றவற்றிற்கு இடமில்லை. |

**2. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன ?**

- ஒரே மொழியைப் பேசும் மக்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்வது உண்டு.
- வாழும் இடத்தின் நில அமைப்பு, இயற்கைத் தடைகள் போன்றவற்றின் காரணமாக அவர்கள் பேசும் மொழியில் சிறிது சிறிதாக மாற்றங்கள் ஏற்படும்.
- அவர்களுக்கு இடையேயான தொடர்பு குறையும் பொழுது இம்மாற்றங்கள் மிகுதியாகிப் புதிய மொழியாகப் பிரியும்.
- அவ்வாறு உருவாகும் புதிய மொழியைக் கிளைமொழி என்பர்.
- கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலியன தமிழில் இருந்து பிரிந்த கிளைமொழிகள் ஆகும்.

**3. இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள் ?**

இலக்கு + இயம் = இலக்கியம். இலக்கியங்கள் நம் வாழ்வை வளப்படுத்த, வழிகாட்டக்கூடிய ஒளிவிளக்குகளாகத் திகழ்கின்றன. இலக்கியங்கள் நம் வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றன. அற இலக்கியங்கள் வழங்கும் அற்புதமான கருத்துகளைக் கடைப்பிடித்தால் நம் வாழ்வு பிறரால் பாராட்டப்படும் தன்மையுடையதாக விளங்கும்.

இலக்கியங்கள் வழங்குகின்ற கருத்துகள் எக்காலமும் நிலைத்து நிற்கின்ற கருவூலமாகத் திகழ்கின்றன. ஒவ்வொரு இலக்கியமும் ஒவ்வொரு உண்மையை பறைசாற்றுகின்றன.

மணிமேகலை பசிப்பிணி அகற்றும் மாண்பை எடுத்துரைக்கிறது. சிலப்பதிகாரம் ''அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்'' என்ற உண்மைகளை உலகிற்கு எடுத்துரைக்கிறது.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

இவ்வாறு ஒவ்வொரு இலக்கியமும் தரும் உண்மையான கருத்துகளைக் கடைப்பிடித்து நாம் வாழ்வின் உன்னத நிலையை அடைவோம். இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்ற நிலை கடந்து அறிவியல் தமிழ், கணினி தமிழ், இணையத் தமிழ், ஊடகத் தமிழ் என்று மொழி வளர்ந்து கொண்டே வருகிறது. இத்தகு வளர்ச்சி தமிழ்மொழியின் உச்சநிலை வளர்ச்சியை நோக்கிச் செல்கிறது என்பதைக் காட்டுகிறது. பலநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்கள் எழுத்து வடிவில் இருப்பதால்தான் நம்மால் இன்றும் படிக்க முடிகிறது.

**கூடுதல் வினாக்கள்**

**1. எழுத்துமொழி என்றால் என்ன ?**

- பேச்சுமொழிக்கு நாம் தந்த வரிவடிவமே எழுத்துமொழியாகும். ஒரு மொழியானது நீண்ட காலம் நிலைபெறுவதற்கு எழுத்து வடிவம் இன்றியமையாதது.
- எழுத்துமொழியில் காலம், இடம் ஆகியவற்றுக்கு ஏற்பச் சொற்கள் சிதைவதில்லை. ஆனால் வரிவடிவம் மாறுபடும்.

**2. மொழி எவ்வாறு உருவானது ?**

தொடக்க காலத்தில் மனிதர்கள் தனித்தனிக் குழுக்களாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் தங்களுக்குள் தனித்தனியான ஒலி குறியீடுகளை உருவாக்கிக் கொண்டனர். இதன் காரண மாகவே மொழிகள் பல தோன்றின.

☆ ☆ ☆

www.surabooks.com

# ஆளுக்கு ஒரு வேலை (பொம்மலாட்டம்) (விரிவானம்)

| குறிப்புச்சட்டகம் |
|---|
| முன்னுரை |
| அப்பாவின் அறிவுரை |
| ஆளுக்கொரு வேலை |
| முயலும் குட்டிச்சுவரும் |
| முடிவுரை |

**முன்னுரை**

சொலவடைகள் உள்ளார்ந்த பொருள் உடையவை. இவை சிறுசிறு தொடர்களாக வட்டாரப் பேச்சுவழக்கில் வழங்கப்படுபவை. ஒரு பையன் பள்ளிக்கூடம் போகாமல் இருக்கிறான். அவனுக்கு கதை சொல்லி சொலவடைகளை எடுத்துக்கூறி திருத்துவதாக இப்பாடப்பகுதி அமைந்துள்ளது.

**அப்பாவின் அறிவுரை**

அணை உடைஞ்சு போன வெள்ளம் அழுதாலும் வராது. இப்போது நீ சரியாகப் படிக்கவில்லையென்றால் வாழ்க்கையில் முன்னேற முடியாது என்று அப்பா அறிவுரை கூறுகிறார். உழைக்கிற மாடுதான் ஊருக்குள்ள விலைபோகும். நீ படிக்கவில்லையென்றால் யாரும் மதிக்க மாட்டார்கள் என்று அம்மா கூறுகிறார்.

**ஆளுக்கொரு வேலை**

பெற்றோரின் கட்டாயத்தால் பள்ளிக்கூடத்துக்கு போனான் சிறுவன். ஆனால் புத்தி விளையாட்டு மேல் இருப்பதால் பள்ளிக்கூடத்திலிருந்து ஓட்டம் பிடிக்கிறான். அப்போது ஓர் எறும்பைப் பார்க்கிறான். எறும்பை விளையாட அழைக்கிறான். நான் என் குழந்தைகளுக்கு தீனி கொடுக்கனும். சொப்பனத்தில் கண்ட அரிசி சோத்துக்கு ஆகுமா ? என்று கிளம்பிவிட்டது. தேனீயை விளையாட அழைக்கிறான். ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு அந்துப்பூச்சி போதும். உன்னைப் போல் ஒரு ஆளு இருந்தா எங்கள் கூட்டமே கெட்டுப் போயிடும் என்றது.

**முயலும் குட்டிச்சுவரும்**

முயலை விளையாட கூப்பிடுகிறான். அகழியில் விழுந்த முதலைக்கு சொர்க்கம் என்பதுபோல் ஆமையிடம் தோற்றுப்போயிட்டேன். நான் வேகமா ஓடனும் என்றது. சிறுவன் கார்த்திகை மாசம் பிறையை கண்ட மாதிரி குட்டிச்சுவருமேல ஏறி விளையாடுகிறான். சுவர் இடிந்து விழுந்தது. அதுல இருந்த பூச்சி, எறும்பு, வண்டு எல்லாம் வெளியில் வருது. நாங்களே அதை விட்டாலும் கதி இல்ல, அப்பால போனாலும் விதி இல்லனு நினைச்சுக்கிட்டு இருக்கோம். உனக்குதான் வேலை இல்லைனா, நாங்க சேர்த்து வைச்சதை எல்லாம் உடைச்சிட்டியே! என்றன.

**முடிவுரை**

அள்ளுவன் பக்கத்துல இருந்தாலும் கிள்ளுறவன் பக்கத்துல இருக்கக்கூடாதுன்னு பையன் ஒரு முடிவுக்கு வாரன். ஊரு உலகத்துல எல்லாம் அவங்கவங்க வேலையைப் பாக்குறாங்க. என் வேலை இப்ப நல்லா படிக்குறது. நானும் இனிமே சும்மா இருக்காம பள்ளிக்கூடம் போயி படிப்பேன் என்றான். கதை சொல்லி இத்தோட கதை முடியுது என்று முடிக்கிறான்.

☆ ☆ ☆


www.surabooks.com



# குற்றியலுகரம், குற்றியலிகரம் (கற்கண்டு)

**அறிந்து கொள்க**

- தமிழ் எழுத்துகளை முதலெழுத்து, சார்பெழுத்து என இரு வகையாகப் பிரிப்பர். உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும்.
- சார்பெழுத்து பத்து வகைப்படும். அவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என்பனவாகும்.




**குற்றியலுகரம்**

- குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம்.
- குறுகிய ஓசையுடைய உகரம் குற்றியலுகரம்.
- சொல்லின் ஈற்றில் நிற்கும் வல்லின மெய்யின் மேல் ஏறிய 'உகரம்' அரை மாத்திரையாக ஒலிக்கும். அது குற்றியலுகரம் எனப்படும்.
- ஒரு சொல்லின் ஈற்று அயல் எழுத்தை அடிப்படையாகக் கொண்டு அதனை ஆறு வகையாகப் பிரிக்கலாம்.

  **(எ.கா.)** காசு, எஃகு, பயறு, பாட்டு, பந்து, சால்பு

- தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்கும்.
- வல்லினம் அல்லாத உகரங்கள் எப்போதும் முழுமையாகவே ஒலிக்கும்.
- இவ்வாறு ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை முற்றியலுகரம் என்பர்.

  **(எ.கா.)** புகு, பசு, விடு, அது, வறு, மாவு, ஏழு

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



## நினைவில் கொள்க

| | | | |
|---|---|---|---|
| 1. | நெடில்தொடர்க் குற்றியலுகரம் | – | நாடு, காசு, நாகு, நீறு, காடு, பாடு |
| 2. | ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் | – | எஃகு, காஃசு, இருபஃது, அஃது |
| 3. | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் | – | வரகு, கயிறு, உலகு, அரசு, அழகு |
| 4. | வன்தொடர்க் குற்றியலுகரம் | – | பாக்கு, கச்சு, பட்டு, பத்து, உப்பு, பற்று |
| 5. | மென்தொடர்க் குற்றியலுகரம் | – | சங்கு, மஞ்சு, நண்டு, அம்பு, இன்று, பந்து |
| 6. | இடைத்தொடர்க் குற்றியலுகரம் | – | கொய்து, சார்பு, மூழ்கு, மார்பு, செய்து |

**குற்றியலிகரம்**

- குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம். இரண்டு இடங்களில் மட்டும் வரும்.

**இடம் 1 :**

குறுகிய ஓசையுடைய இகரம் தனக்கு உரிய ஒரு மாத்திரையிலிருந்து அரை மாத்திரையாகக் குறைந்து ஒலிப்பது குற்றியலிகரம் ஆகும்.

**(எ.கா.)** கொக்கு + யாது = கொக்கியாது (க் + உ) (க் + இ)

தோப்பு + யாது = தோப்பியாது (ப் + உ) (ப் + இ)

நாடு + யாது = நாடியாது (ட் + உ) (ட் + இ)

எனப்படுவது + யாது = எனப்படுவதியாது (த் + உ) (த் + இ)

**இடம் 2 :**

'மியா' என்பது ஓர் அசைச்சொல் (ஓசை நயத்திற்காக வருவது). இதில் 'மி' யில் (மி = ம் + இ) உள்ள இகரம் குற்றியலிகரம் ஆகும். இது சொற்களில் இடம்பெறும்போது தனக்குரிய மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும்.

**(எ.கா.)** கேள் + மியா = கேண்மியா

செல் + மியா = சென்மியா

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

**இலக்கண வினா விடைகள் :**

1. **முதலெழுத்துகள் எத்தனை ?**
அ) 12 ஆ) 18 இ) 22 ஈ) 30 **விடை: ஈ) 30**

2. **சார்பெழுத்து எத்தனை வகைப்படும் ?**
அ) ஐந்து ஆ) எட்டு இ) பத்து ஈ) பன்னிரெண்டு **விடை: இ) பத்து**

3. **குறுக்கங்கள் எத்தனை ?**
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து **விடை: இ) நான்கு**

4. **தமிழ் எழுத்துகளை முதலெழுத்து, ......................... என இரு வகையாகப் பிரிப்பர்.**
அ) உயிர்மெய் ஆ) உயிர்
இ) சார்பெழுத்து ஈ) ஆய்த எழுத்து **விடை: இ) சார்பெழுத்து**

5. **'கு' என்னும் குறிலெழுத்தின் மாத்திரை எவ்வளவு ?**
அ) அரை மாத்திரை ஆ) ஒரு மாத்திரை
இ) ஒன்றரை மாத்திரை ஈ) இரண்டு மாத்திரை **விடை: ஆ) ஒரு மாத்திரை**

6. **மியா என்பது .........................**
அ) திசைச்சொல் ஆ) வடசொல்
இ) திரிசொல் ஈ) அசைச்சொல் **விடை: ஈ) அசைச்சொல்**

7. **குற்றியலுகரம் தனக்கு முன் உள்ள எழுத்தைக் கொண்டு ................ வகையாகப் பிரிக்கப்படும்.**
அ) ஆறு ஆ) எட்டு இ) பத்து ஈ) பன்னிரண்டு **விடை: அ) ஆறு**

8. **தோப்பு + யாது = ................. எவ்வாறு புணரும் ?**
அ) தோப்புயாது ஆ) தோப்பியாது
இ) தோப்புயது ஈ) தோப்பாயாது **விடை: ஆ) தோப்பியாது**

9. **குற்றியலிகரம் தற்போது ................ மட்டுமே வழக்கில் உள்ளது.**
அ) இலக்கியங்களில் ஆ) உரைநடையில்
இ) கவிதையில் ஈ) பேச்சு வழக்கில் **விடை: அ) இலக்கியங்களில்**

10. **குற்றியலிகரம்**
அ) குறுமை + இயல் + உகரம் ஆ) குறுமை + இயல் + இகரம்
இ) குறுமை + இயல் + மகரம் ஈ) குறுமை + இயல் + ஊகாரம்
**விடை: ஆ) குறுமை + இயல் + இகரம்**

www.surabooks.com

www.surabooks.com



11. **காது, ஆறு, பாகு – குற்றியலுகரத்தைக் கண்டறிக.**

அ) ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் ஆ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
இ) வன்தொடர்க் குற்றியலுகரம் ஈ) நெடில்தொடர்க் குற்றியலுகரம்

**விடை: ஈ) நெடில்தொடர்க் குற்றியலுகரம்**

12. **இடைத்தொடர்க் குற்றியலுகரத்தைக் கண்டறிக.**

அ) எகு ஆ) மார்பு இ) பத்து ஈ) வரலாறு **விடை: ஆ) மார்பு**

13. **மெல்லின மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரத்தைக் கண்டறிக.**

அ) எய்து, மூழ்கு ஆ) பந்து, அம்பு இ) மாசு, பாகு ஈ) எஃகு, அது **விடை: ஆ) பந்து, அம்பு**

14. **ய், ர், ல், வ், ழ், ள்**

அ) மெல்லினம் ஆ) வல்லினம் இ) இடையினம் ஈ) உயிரினம் **விடை: இ) இடையினம்**

15. **முற்றியலுகரம்**

அ) கயிறு ஆ) ஒன்பது இ) அது ஈ) பாட்டு **விடை: இ) அது**

16. **உகரம் இகரமாவது**

அ) குற்றியலுகரம் ஆ) குற்றியலிகரம்
இ) முற்றியலுகரம் ஈ) குற்றியலகரம் **விடை: ஆ) குற்றியலிகரம்**

**சான்று தருக.**

1. **உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்**

அ) வரலாறு ஆ) பத்து இ) எய்து ஈ) அம்பு **விடை: அ) வரலாறு**

2. **குற்றியலுகரம்**

அ) கு, சு, டு, து, பூ, று ஆ) கு, சு, டு, தூ, பு, ரு
இ) கு, சு, டு, து, பு, ர ஈ) கு, சு, டு, து, பு, று **விடை: ஈ) கு, சு, டு, து, பு, று**

3. **மென்தொடர்க் குற்றியலுகரம்**

அ) பத்து ஆ) எய்து இ) பந்து ஈ) கொக்கு **விடை: இ) பந்து**

4. **சார்பெழுத்து**

அ) உயிர்மெய் ஆ) உயிரளபெடை
இ) ஐகாரக்குறுக்கம் ஈ) இவை அனைத்தும் **விடை: ஈ) இவை அனைத்தும்**

5. **இடைத்தொடர்க் குற்றியலுகரம்**

அ) பந்து ஆ) மூழ்கு இ) உப்பு ஈ) அரசு **விடை: ஆ) மூழ்கு**

6. **வல்லின மெய்**

அ) க், ச், ட், த், ப், ற் ஆ) க், ச், த், ட், ற், ன்

இ) ங், ண், ஞ், ந், ம், ன் ஈ) ய், ர், ல், வ், ழ், ற்

**விடை: அ) க், ச், ட், த், ப், ற்**

**நிரப்புக.**

1. **எழுத்துகளை ஒலிக்கும் கால அளவு .................. என்பர்.**

அ) மாத்திரை ஆ) வினாடி இ) நிமிடம் ஈ) நேரம்

**விடை: அ) மாத்திரை**

2. **நெடிலை தொடர்ந்து வரும் உகரம் ............... குற்றியலுகரம் எனப்படும்.**

அ) ஆய்தத்தொடர் ஆ) மென்தொடர்

இ) வன்தொடர் ஈ) நெடில்தொடர்

**விடை: ஈ) நெடில் தொடர்**

3. **தனக்குரிய ஓசையில் குறைந்து அரை மாத்திரையில் ஒலிப்பது**

அ) முற்றியலுகரம் ஆ) குற்றியலிகரம்

இ) குற்றியலுகரம் ஈ) எதுவுமில்லை

**விடை: இ) குற்றியலுகரம்**

4. **முழுமையாக எப்போதும் ஒலிக்கும் உகரம்**

அ) உயிர்த் தொடர் குற்றியலுகரம் ஆ) நெடில் தொடர்க் குற்றியலுகரம்

இ) குற்றியலிகரம் ஈ) முற்றியலுகரம்

**விடை: ஈ) முற்றியலுகரம்**

5. **தற்போது உரைநடை வழக்கில் இல்லாத இலக்கியங்களில் இருக்கும் உகரம்**

அ) குற்றியலுகரம் ஆ) முற்றியலுகரம்

இ) குற்றியலிகரம் ஈ) எதுவுமில்லை

**விடை: இ) குற்றியலிகரம்**

6. **இடையின மெய்எழுத்துகளைத் தொடர்வது ............. குற்றியலுகரம்.**

அ) மென்தொடர்க் ஆ) உயிர்த்தொடர்க்

இ) வன்தொடர்க் ஈ) இடைத்தொடர்க்

**விடை: ஈ) இடைத்தொடர்க்**

7. **எஃது, அஃது என்பவை ............ குற்றியலுகரம்.**

அ) உயிர்தொடர்க் ஆ) வன்தொடர்க்

இ) ஆய்தத்தொடர்க் ஈ) நெடில்தொடர்க்

**விடை: இ) ஆய்தத்தொடர்க்**

www.surabooks.com

**கூறியவாறு செய்க.**

1. **நெடில் தொடர்க் குற்றியலுகரம் (பொருந்தாததைக் கண்டுபிடி)**

அ) பாகு ஆ) பாடு இ) பாக்கு ஈ) ஆறு **விடை: இ) பாக்கு**

2. **உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் (பொருந்துவதைத் தேர்க)**

அ) உப்பு ஆ) அம்பு இ) எய்து ஈ) அரசு **விடை: ஈ) அரசு**

3. **வல்லினம் இடம் பெறும் சொல் கண்டறிக.**

அ) பண்பு ஆ) ஒன்பது இ) பத்து ஈ) ஆறு **விடை: இ) பத்து**

4. **குற்றியலிகரம் இடம் பெற்ற சரியான சொற்களைக் கண்டுபிடி.**

1) கொக்கியாது 2) வரகியாது 3) வரகுயாது 4) கொக்குயாது

அ) 1, 2 சரி ஆ) 2, 3 சரி இ) 1, 4 சரி ஈ) 3, 4 சரி **விடை: அ) 1, 2 சரி**

5. **நெடில்தொடர்க் குற்றியலுகரம் –ஈரெழுத்து சொற்களைத் தேர்க.**

1) பாகு, மாசு 2) பசு, மாசு 3) பாடு, ஆறு 4) காது, மாவு

அ) 1, 2 சரி ஆ) 2, 3 சரி இ) 1, 4 சரி ஈ) 1, 3 சரி **விடை: ஈ) 1, 3 சரி**

6. **புகு, பசு, அது, ஏழு (இடம் பெற்றுள்ள உகரத்தைக் கண்டறிக.)**

அ) உயிர்தொடர் குற்றியலுகரம் ஆ) நெடில் குற்றியலுகரம்

இ) குற்றியலிகரம் ஈ) முற்றியலுகரம் **விடை: ஈ) முற்றியலுகரம்**

☆ ☆ ☆

www.surabooks.com

# இயல் 2 - இயற்கை - அணிநிழல் காடு

## காடு (கவிதைப்பேழை)

- சுரதா

### மன வரைபடம்




### ஆசிரியர் குறிப்பு



- சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். இவர் பாரதிதாசன் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர்.
- பாரதிதாசனின் இயற்பெயர் 'சுப்புரத்தினம்'. எனவே, தம் பெயரைச் சுப்புரத்தின தாசன் என்று மாற்றிக்கொண்டார். அதன் சுருக்கமே சுரதா என்பதாகும்.
- உவமைகளைப் பயன்படுத்திக் கவிதைகள் எழுதுவதில் வல்லவர் என்பதால் இவரை **உவமைக் கவிஞர்** என்றும் அழைப்பர்.
- **அமுதும் தேனும், தேன்மழை, துறைமுகம்** உள்ளிட்ட பல நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

### சொல்லும் பொருளும்

- ஈன்று – தந்து
- கொம்பு – கிளை
- அதிமதுரம் – மிகுந்த சுவை
- களித்திட – மகிழ்ந்திட
- நச்சரவம் – விடமுள்ள பாம்பு
- விடுதி – தங்கும் இடம்

### நூற்குறிப்பு

- இப்பாடல் **தேன்மழை** என்னும் நூலில் **இயற்கை எழில்** என்னும் பகுதியிலிருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளது.
- இப்பாடல் **கிளிக்கண்ணி** என்னும் பாவகையைச் சேர்ந்தது. கிளியின் மொழி போன்ற இனிய சொற்களைப் பேசும் பெண்ணை நோக்கிக் கூறுவதாக இனிய சந்தத்தில் பாடப்படும் இசைப்பாடல் வகை **கிளிக்கண்ணி** ஆகும்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



## வினாக்கள்

### குறுவினா

**1. காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?**

கார்த்திகை விளக்குகள் போலக் காடு முழுவதும் மலர்கள் மலர்ந்திருப்பதாகக் கவிஞர் உவமைப்படுத்துகிறார்.

**2. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?**

- காடு பல வகையான பொருள்களைத் தரும். காய்கனிகளையும் தரும்.
- எல்லாரும் கூடி மகிழ்ந்திட குளிர்ந்த நிழல் தரும்.
- மரங்கள் வெயிலை மறைத்து நிழல் தரும்.

### சிறுவினா

**1. 'காடு' பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் சுரதா கூறுவனவற்றை எழுதுக.**

- பச்சை நிறமுடைய மயில்கள் நடனமாடுகின்றன.
- பன்றிகள் காட்டில் உள்ள கிழங்குகளைத் தோண்டி உண்ணுகின்றன. அதனைக் கண்டு பாம்புகள் கலக்கமடைகின்றன.
- நரிக்கூட்டம் ஊளையிடுகின்றன. சுவையுடைய தழையை யானைகள் தின்றபடி புதிய நடைபோடுகின்றன.
- பூக்கள் பூத்துக் குலுங்கும் மரங்களில் குயில்கள் கூவுகின்றன.
- காட்டில் சிங்கம், புலி, கரடி, சிறுத்தை போன்ற விலங்கினங்கள் எங்கும் அலைந்து திரிகின்றன.

**2. காட்டை இயற்கை விடுதி என்று கவிஞர் சுரதா கூறக் காரணம் என்ன?**

- காடு இயற்கை தந்த கொடை. காட்டில் கார்த்திகை மாதத்து விளக்குகளைப் போல காட்டுப் பூக்கள் பூத்திருக்கும். அதனைப் பார்க்கும் கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும்.
- பல்லுயிர்களின் வாழ்விடம் காடாகும். இது பறவைகள், விலங்குகள், தாவரங்கள் வளர்வதற்கு வாழ்வாதாரமாக விளங்குகிறது.
- யானை, புலி, சிறுத்தை, சிங்கம், மான், கரடி, காட்டு மாடு போன்ற அரிய விலங்குகள் இக்காட்டில் வாழ்கின்றன. காடுகள் நிழல் தருகின்றன; காய்கள் தருகின்றன; கனிகள் தருகின்றன.
- வன விலங்குகளின் உறைவிடமாகவும், பறவைகளின் சரணாலயமாகவும் மனிதர்களின் வாழ்வாதாரமாகவும் விளங்குவது இந்தக் காடுகள்தான்.
- இங்கு பறவைகள், விலங்கினங்கள் தங்கிச் செல்லும் செயலைத்தான் கவிஞர் காட்டை இயற்கை விடுதி என்று கூறி மகிழ்கிறார்.

### கூடுதல் வினாக்கள்

**1. காட்டைக் குறிக்கும் வேறு பெயர்களை எழுதுக.**

கா, கால், கான், கானகம், அடவி, அரண், ஆரணி, புரவு, பொற்றை, பொழில், தில்லம், அழுவம், இயவு, பழவம், முளரி, வல்லை, விடர், வியல், வனம் உள்ளிட்ட பல்வேறு பெயர்கள் உள்ளன.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



**2. எங்கும் அலைந்து திரியும் விலங்குகள் எவை ?**

இயற்கைத் தங்குமிடமாகிய காட்டில் சிங்கம், புலி, கரடி, சிறுத்தை போன்ற விலங்கினங்கள் எங்கும் அலைந்து திரியும்.

## செய்யுள் வரி வினா விடை

**1. காடு பொருள்கொடுக்கும்**
**காய்கனி ஈன்றெடுக்கும்**
**கூடிக் களித்திடவே - கிளியே**
**குளிர்ந்த நிழல்கொடுக்கும்**

**குரங்கு குடியிருக்கும்**
**கொம்பில் கனிபறிக்கும்**
**மரங்கள் வெயில்மறைக்கும் - கிளியே**
**வழியில் தடையிருக்கும்.**

**வினாக்கள்**

**1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ?**

அ) தேன்மழை ஆ) துறைமுகம்
இ) சொல்லும் பொருளும் ஈ) அமுதும் தேனும் **விடை அ) தேன்மழை**

**2. இப்பாடல் ................ என்னும் பாவகையைச் சேர்ந்தது.**

அ) நேரிசை வெண்பா ஆ) ஆசிரியப்பா
இ) கிளிக்கண்ணி ஈ) இன்னிசை சிந்தியல் வெண்பா
**விடை இ) கிளிக்கண்ணி**

**3. காடு எதை ஈன்றெடுக்கும் ?**

அ) மரங்கள் ஆ) நிழல்கள் இ) காய்கனி ஈ) அருவிகள் **விடை இ) காய்கனி**

**4. மரக்கிளைகளில் உள்ள கனிகளைப் பறித்து உண்ணுவது எது ?**

அ) பறவைகள் ஆ) குரங்குகள்
இ) பூச்சிகள் ஈ) விலங்குகள் **விடை ஆ) குரங்குகள்**

**5. கொம்பு என்பதன் பொருள் யாது ?**

அ) இலை ஆ) கனி இ) வேர் ஈ) கிளை **விடை ஈ) கிளை**

**2. பச்சை மயில்நடிக்கும்**
**பன்றி கிழங்கெடுக்கும்**
**நச்சர வங்கலங்கும் - கிளியே**
**நரியெலாம் ஊளையிடும்**
**அதிமது ரத்தழையை**
**யானைகள் தின்றபடி**

**புதுநடை போடுமடீ - கிளியே**
**பூங்குயில் கூவுமடீ!**
**சிங்கம் புலிகரடி**
**சிறுத்தை விலங்கினங்கள்**
**எங்கும் திரியுமடீ - கிளியே**
**இயற்கை விடுதியிலே!**

**வினாக்கள்**

1. **இப்பாடலை இயற்றியவர் யார்?**

அ) சுரதா ஆ) பாரதிதாசன்
இ) புதுமைப்பித்தன் ஈ) மு.மேத்தா **விடை அ) சுரதா**

2. **சுரதா எவ்வாறு அழைக்கப்படுகிறார்?**

அ) மக்கள் கவிஞர் ஆ) பாட்டாளி கவிஞர்
இ) இளமைக் கவிஞர் ஈ) உவமைக் கவிஞர் **விடை ஈ) உவமைக் கவிஞர்**

3. **நடனமாடுவது எது?**

அ) பாம்புகள் ஆ) மயில்கள் இ) குரங்குகள் ஈ) பன்றிகள் **விடை ஆ) மயில்கள்**

4. **புதிய நடை போடுவது எது?**

அ) யானைகள் ஆ) சிங்கங்கள்
இ) சிறுத்தைகள் ஈ) கரடிகள் **விடை அ) யானைகள்**

5. **இப்பாடலின் தலைப்பு யாது?**

அ) காடு ஆ) ஒடை இ) காற்று ஈ) வனம் **விடை அ) காடு**

☆ ☆ ☆

www.surabooks.com

# அப்படியே நிற்கட்டும் அந்த மரம் (கவிதைப்பேழை)

- ராஜமார்த்தாண்டன்

## மன வரைபடம்


**செங்காய்த் தோற்றம்**
பச்சைக் காய்கள் நிறம் மாறும். சிறுவர்கள் மனம் பரவசம் பொங்கும். கருநீலக் கோலிக் குண்டுகளாய் நாவற் பழங்கள் தொங்கும். நாவில் நீருறும்.

**உதிரும் பழங்கள்**
காக்கை, குருவி, மைனா, கிளிகள், அணில்களுடன் காற்றும் உதிர்த்துவிடும்.




**பழம் பொறுக்கும் தங்கச்சிகள்**
சுட்ட பழம் பொறுக்க சிறுவர் கூட்டம் பெட்டியுடன் அலைமோதும். பழந்தின்னி வௌவால் கூட்டம் படையெடுத்து வரும்.

**மரத்தின் வயது**
ஐந்து வயதிலும் இப்படியே! ஐம்பது தாண்டியும் அப்படியே!



**சாய்ந்து விட்ட மரம்**
பேய்க் காற்றில் சாய்ந்தது, ஊர் மக்கள் துஷ்டி கேட்டல், எனக்கு போக மனமில்லை என் மனவெளியில் அப்படியே நிற்கிறது அந்த மரம்...

**நினைவுகள்**
அன்று குளிர்ந்த நிழலில் விளையாடியதும் நேற்று என் மகன் விளையாடுவதும் இந்த நிழலில் தானே.

## ஆசிரியர் குறிப்பு

- இக்கவிதையை இயற்றியவர் ராஜமார்த்தாண்டன்.
- கவிஞர், இதழாளர், கவிதைத் திறனாய்வாளர் எனப் பன்முகத் திறன்கள் பெற்றவர்.
- **கொல்லிப்பாவை** என்னும் சிற்றிதழை நடத்தியவர். **ராஜமார்த்தாண்டன் கவிதைகள்** என்னும் நூலுக்காகத் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசு பெற்றவர்.
- சிறந்த தமிழ்க் கவிதைகளைத் தொகுத்து **'கொங்குதேர் வாழ்க்கை'** என்னும் தலைப்பில் நூலாக்கியுள்ளார். இவரது அப்படியே நிற்கட்டும் அந்த மரம் என்னும் நூலில் உள்ள கவிதை இங்குத் தரப்பட்டுள்ளது.

## சொல்லும் பொருளும்

- பரவசம் – மகிழ்ச்சிப் பெருக்கு
- துஷ்டி கேட்டல் – துக்கம் விசாரித்தல்
- கிளியாந்தட்டு – ஒரு வகை விளையாட்டு
- குஞ்சு குளுவான்கள் – சிறுகுழந்தைகள்